**ஜூலை 7**

**மனன வசனம்**

**இந்த இயேசுவை தேவன் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாய் இருக்கிறோம். அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார். அப்போஸ் 2:32,33.**

**ஆராய்ச்சிக்கு**

*அப் 2:1-4;*

*யோவான் 14:16;*

*அப் 2:5-13;;*

*யோவேல் 2:28-32;*

*அப் 2:22-39;*

*சங்கீதம் 110:1-3.*

ஜூலை 7 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 2

# பெந்தெகொஸ்தே



ஏழு வாரங்களின் பண்டிகையை கிரேக்க மொழியில் **பெந்தெகொஸ்தே** என்பார்கள். யாத் 34:22. இந்தப் பண்டிகையானது முதற்கனிகளைச் செலுத்தும் பண்டிகை ஆகும். எண் 28:26. **பெந்தெகொஸ்தே** என்றால் ''ஐம்பதாவது'' என்று அர்த்தம். பஸ்கா பண்டிகைக்கு அடுத்த வாரத்தின் முதல் நாளில் வாற்கோதுமை கதிர்க்கட்டுகளைப் படைத்ததிலிருந்து ஐம்பதாவது நாளில் அப்பண்டிகையைக் கொண்டாடினதால் இப்பெயர் வந்தது. 'கோதுமை அறுப்பின் முதற்பலனை' ஆண்டவருக்குமுன்பாக இஸ்ரவேலர்கள் செலுத்தி, நன்றிசொல்லி, களிகூர்ந்து அப்பண்டிகையைக் கொண்டாடினார்கள். யாத் 34:22.

கிறிஸ்தவ சபையின் முதல் ஆவிக்குரிய அறுவடையைச் சுட்டிக்காட்டுவதற்கு பொருத்தமான ஓர் உருவகமாக இந்தப் பண்டிகை இருந்தது; முன்பு எப்போதும் இல்லாத அளவில் பரிசுத்த ஆவியானவர் பரிபூரணமாக ஊற்றப்பட்டார்; அன்று ஒரே நாளில் மூவாயிரம் பேர் ஆவியானரின் ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள். அப் 2:41. இயேசு பரலோகம் சென்று, அங்கு மகிமையடைந்ததுமே, பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுகிறார்; எல்லாரையும்போல தவறான புரிந்துகொள்தலுடன் காணப்பட்ட அந்தக் கலிலேயர்கள் உலகத்தையே மாற்றத்தக்க மனமாற்றத்தையும் தைரியத்தையும் பெறுகிறார்கள்.

பெந்தெகொஸ்தே நாளானது சபையின் பிறந்த நாளாகக் கருதப்படுகிறது. அன்றுதான் கிறிஸ்துவைப் பின்பற்றின யூதர்களும், (பிறகு) புறஜாதியாரும் பூமியில் சபையின் புதுக் குடும்ப அங்கத்தினர்களாக அதிகாரப்பூர்வமாக மாறினார்கள்.

*2018, ஜூலை 14 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஜூலை 8

## ஆவியானவரின் வருகை

ஆவியானவரைக் குறித்த வாக்குத்தம் நிறைவேறும்படி, இயேசு கட்டளையிட்டிருந்தபடியே எருசலேமில் விசுவாசிகள் காத்திருந்தார்கள்; ஊக்கமாக ஜெபித்தார்கள், உண்மையாக மனந்திருந்திருனார்கள்; போற்றித்துதித்தார்கள். அந்த நாள் வந்தபோது அவர்களெல்லாரும் ‘ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.’ அப் 2:1. அப் 1இன் அதே மேலறையில்தான் அவர்கள் கூடியிருக்கவேண்டும். ஆனால், சீக்கிரத்திலே பொதுவான ஓரிடத்தில் அவர்கள் கூடவேண்டிய நிலை ஏற்பட்டது. அப் 2:6-13.

**ஆவியானவர் ஊற்றப்பட்டபோது, வேறு என்ன தெய்வீக நிகழ்வுகள் நிகழ்ந்தன? அப் 2:1–3.**

பக்திமயமான சூழல் இருந்தது. பலத்த காற்று அடிக்கிறதுபோல வானத்திலிருந்து முழக்கமுண்டாகி, அந்த இடம் முழுவதையும் நிரப்பிற்று. பிறகு, அக்கினி போன்ற பிழம்புகள் தோன்றி, அவர்கள் மேல் அமர்ந்தன. காற்றும் அக்கினியும் தேவனுடைய வெளிப்பாட்டைச் சுட்டிக்காட்டுவதற்கு வேதாகமம் பயன்படுத்தும் உருவகங்கள். உதாரணமாக, யாத் 3:2, 19:18; உபா 4:15. மேலும், காற்றும் அக்கினியும் ஆவியானவரைச் சுட்டிக்காட்டவும் பயன்பட்டுள்ளன. யோவான் 3:8; மத் 3:11. பெந்தெகொஸ்தே நாளின் தெய்வீக நிகழ்வுகளுக்கு பல அர்த்தங்கள் இருக்கலாம்; ஆனால், வாக்குரைக்கப்பட்டபடி ஆவியானவர் ஊற்றப்பட்ட நிகழ்வானது இரட்சிப்பின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றென்பதற்கு அவை சாட்சியாக இருந்தது.

எல்லாக் காலங்களிலும் ஆவியானவர் செயல்பட்டு வந்தார். பழைய ஏற்பாட்டுக் கால தேவ பிள்ளைகளின் வாழ்க்கையில் அவருடைய தாக்கம் விசேஷித்த விதத்தில் இருந்தது; ஆனால், பரிபூரணமாக வெளிப்படவில்லை. “கோத்திரப்பிதாக்களின் நாட்களில் ஆவியானவரின் தாக்கம் விசேஷித்த விதத்தில் இருந்தது; ஆனால் பரிபூரணமாக வெளிப்படவில்லை.இப்போது, இரட்சகர் சொல்லியிருதபடி ஆவியானவரின் ஈவுக்காக சீடர்கள் வேண்டுதல் செய்தார்கள்; பரலோகத்தில் கிறிஸ்துவும் பரிந்துபேசினார். ஆவியானவரின் ஈவை தம் மக்கள்மேல் பொழிந்தருளும்படி, வேண்டி மன்றாடினார்.” - *EGW, AA, p 37.*

மேசியா வந்து ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுப்பார் என்று யோவான் ஸ்நானனும் முன்னறிவித்திருந்தார். லூக்கா 3:16; ஒப்பிடவும் அப் 11:16. இயேசுவும் இந்த ஞானஸ்நானம் பற்றி பலமுறை குறிப்பிட்டுள்ளார். லூக்கா 24;49; அப் 1:8. ஆவியானவர்ஊற்றப்படும்படி பிதாவின்முன்இயேசுவேண்டிக்கொண்டதே அவர் நமக்காகச் செய்த முதல் பரிந்துபேசுதலாகும். யோவான் 14:16,26; 15:26. பெந்தெகொஸ்தே நாளில் இந்த வாக்குறுதி நிறைவேறியது. இயேசு சிலுவையில் வெற்றிபெற்று, பரலோகத்தில் மேன்மையடைந்ததைக் கொண்டாடுகிற சிறப்பான ஒரு நிகழ்வாக ஆவியின் ஞானஸ்நானம் இருக்கலாம்; ஆனால் ஆவியால் நிறைந்திருப்பது விசுவாசிகளின் வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நடைபெற வேண்டிய ஓர் அனுபவம். அப் 4:8,31; 11:24; 13:9,52; எபே 5:18.

ஆவியானவர் உங்கள் வாழ்க்கையில் கிரியைசெய்து வருகிறார் என்பதற்கு ஆதாரம் என்ன?

## அந்நியபாஷையின் வரம்

விசுவாசிகள் பரிசுத்த ஆவியை இலவசமாகப் பெற்றார்கள்; அந்நியபாஷை வரம் கொடுக்கப்பட்டதும் அதற்கு ஓர் உதாரணம். ஆவியின் பல்வேறு வெளிப்பாடுகளில் இதுவும் ஒன்று. அப் 10:45,46; 19:6. தீர்க்கதரிசனம் சொல்வது (அப் 11:28), தரிசனம் காண்பது (அப் 7:55), மனதில் தாக்கத்தை உண்டாக்கும் விதத்தில் பேசுவது (அப் 2:8; 28:24), குணப்படுத்துவது (அப் 3:6,12; 5:12,16), சேவை செய்வதற்கான தகுதியைப் பெறுவது (அப் 6:3,5) போன்றவை வேறு சில வெளிப்பாடுகளாகும்.

ஆவியானவர் அருளப்பட்டதைச் சுட்டிக்காட்டவோ, அதற்கான ஆதாரமாகவோ பெந்தெகொஸ்தே நாளில் அந்நிய பாஷை வரம் கொடுக்கப்படவில்லை. சபையின் உலகளாவிய ஊழியப்பணியை ஆரம்பிக்க நேரம் வந்ததை அது சுட்டிக்காட்டியது. அப் 1:8-ன் அழைப்பிற்கு அந்நிய பாஷை வரம் அவசியம். அப்போஸ்தலர்கள் கலாச்சாரப் பேதங்களைக் கடந்து, உலகின் கடைசி பரியந்தமும் சென்று சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டும். எனவே, அம்மக்களுக்குத் தெரிந்த மொழிகளில் இவர்கள் பேசவேண்டியது அவசியமாயிருந்தது.

**அக்காலத்தில் வழக்கத்திலிருந்த பிறநாட்டு மொழிகளில் அப்போஸ்தலர்கள் பேசினார்கள் என்பதற்கு அப் 2:5–13இல் உள்ள ஆதாரம் என்ன?**

முதல் நூற்றாண்டில் 80 லட்சத்திலிருந்து 1 கோடி யூதர்கள் வரை வாழ்ந்திருக்கலாம். அவர்களில் சுமார் 60 சதவிகிதம்பேர் யூதேயாவிற்கு வெளியே குடியிருந்தார்கள். பண்டிகைக்காக வெளிநாடுகளிலிருந்து எருசலேமிற்கு வந்திருந்தார்கள்; யூதேயாவிலிருந்து யூதர்கள் அப்போது பேசிய அரமெய்க் மொழியில் பேசத் தெரியாதவர்களாக இருந்தார்கள்.

பெந்தெகொஸ்தே நாளில் மனமாறிய பலர் பல்வேறு நாடுகளிலிருந்து அங்கு வந்தவர்கள் ஆவார்கள்; அவர்கள் தங்கள் பாஷைகளில் அப்போஸ்தலர்கள் பேசுவதைக் கேட்டார்கள். பிற நாடுகளில் ஏற்கனவே வழக்கத்திலிருந்த மொழிகளில் அப்போஸ்தலர்கள் பேசினார்கள்; தங்களையே மறந்து முன்பின் அறியப்படாத மொழிகளில் பேசவில்லை. அப் 2:6,8 இல் பாஷை என்பதற்கு **டயலெக்டோஸ்** என்கிற கிரேக்க வார்த்தை உள்ளது. ஒரு பகுதியில் அல்லது தேசத்தில் பேசப்படுகிற பாஷையை அது சுட்டிக்காட்டுகிறது. ஒப்பிடவும்: அப் 21:40; 22:2; 26:14. எனவே வெவ்வேறு பாஷைகளில் அவர்கள் பேசினார்களென்பது தெளிவாகிறது. படிப்பறிவில்லாத கலிலேயர்கள்கூட, சற்று முன்வரை தாங்கள் அறிந்திராத ஒரு மொழியை இப்போது பேசமுடிந்தது. அங்கு நிகழ்ந்ததைப் பார்த்துக்கொண்டிருந்த உள்ளூர் யூதர்களுக்கு இந்தப் பாஷைகள் எதுவும் தெரியாது; அதனால்தான் அப்போஸ்தலர்கள் மதுபான வெறியில், அர்த்தமில்லாமல், விநோதமாக கூச்சல்போடுவதாகச் சொன்னார்கள். ‘மற்றவர்களோ: இவர்கள் மதுபானத்தினால் நிறைந்திருக்கிறார்களென்று பரியாசம்பண்ணினார்கள்.’ அப் 2:13.

தேவ வெளிப்பாட்டை வல்லமையான விதத்தில் கண்ணாரக் கண்டும், அவர்களை மதுபான வெறியர்களென நினைத்தார்கள். நாமும் ஆவிக்குரிய குருடர்களாகிப்போகாதபடி என்ன செய்யலாம்?

செவ்வாய், ஜூலை 10

## பேதுருவின் பிரசங்கம்

மதுபான வெறிகொண்டதாக எழுந்த குற்றச்சாட்டுதான் அங்கு நிழ்ந்ததை விவரிக்க பேதுருவுக்கு வாய்ப்பை உருவாக்குகிறது. தீர்க்கதரிசனத்தின் நிறை வேறுதலாக ஆவியானவர் ஊற்றப்பட்டாரென பிரசங்கத்தை ஆரம்பிக்கிறார். அப் 2:16-21.

**அப் 2:17ஐயும் யோவேல் 2:28 ஐயும் ஒப்பிடவும். யோவேல் சொன்ன தீர்க்கதரிசனம்தான் அப்போது நிறைவேறியதென பேதுரு எவ்வாறு அறிந்தார்?**

இரட்சிப்பின் வரலாற்றில் இனி வரயிருந்த ஒரு காலக்கட்டம் பற்றி யோவேல் தீர்க்கதரிசனம் சொன்னார். யோவேல் 2:32. அப்போது இயற்கையில் பல்வேறு அடையாளங்கள் நிகழவிருந்தன, ஆவியானவர் பரிபூரணமாக ஊற்றப்பட இருந்தார். யோவேல் 2:28-31. ஆனால் யோவேலின் தீர்க்கதரிசனத்தை சற்று வித்தி யாசமாக பேதுரு சுட்டிக்காட்டுகிறார். 'அதற்குபின்பு' என்று யோவேல் தீர்க்கதரிசனத்தைத் துவங்குகிறார். யோவேல் 2:28. எதிர்காலத்தில் நிகழப்போவதை அவர் சுட்டிக்காட்டுகிறார். ஆனால், பேதுரு அதை 'கடைசி நாட்களில்' என்று கூறுகிறார். அப் 2:17. அதாவது, இரட்சிப்பின் வரலாற்றின் இறுதிக் கட்டம் துவங்கிவிட்டதைக் குறிப்பிடுகிறார். கடைசிக்கால நிகழ்வுகள் ஒட்டுமொத்தமாக அன்று நிகழ்ந்துவிடவில்லை; மாறாக, கடைசிக்கால சபை துரிதமாகச் செயல்படும் நேரம் வந்துவிட்டதை அந்நிகழ்வுகள் எடுத்துக்காட்டின. எப்போது முடிவு இருக்கும் என்று தெரியாவிட்டாலும், முடிவுக்கு வெகுநாட்கள் இல்லை என் பதை உறுதியாக அறிந்திருந்தார்கள்.

**நற்செய்தியை அறிவிக்கும் பேதுரு அப் 2:22–32இல் எதை முக்கியமாக வலியுறுத்துகிறார்?**

பெந்தெகொஸ்தே நாள் குறித்த தீர்க்கதரிசனத்தை வலியுறுத்திவிட்டு, சமீபத்திய நிகழ்வுகளான இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் பற்றிக் கூறுகிறார். எல்லாவற்றையும்விட உயிர்த்தெழுதலை அதிகமாக வலியுறுத்துகிறார். ஏனென்றால், நற்செய்தியில் ஒரு முக்கிய காரணியாக அது இருந்தது. இயேசுவே மேசியா என்று நிரூபிக்கும் ஒரு நிகழ்வாக உயிர்த்தெழுதலை பேதுரு சுட்டிக்காட்டுகிறார். அப் 2:22,27. அந்த உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை வேதவனங்கள்மூலம் காட்டுகிறார்.

இயேசுவானவர் மேசியாவாக இருந்ததால், மரணத்தால் அவரைக் கட்ட முடியவில்லை. எனவே, பேதுருவும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் இயேசுவின் உயிர்த்தெழுதலை வல்லமையான ஓர் ஆதாரமாகக் கருதினார்கள்; இயேசுவே மேசியா என்பதற்கும், இரட்சிப்பு குறித்ததான ஒட்டுமொத்த செய்திக்கும் அது ஆதாரமாக இருந்தது.

நம்மைச் சுற்றிலும் மரணம் காணப்படுகிறது; நம்மையும் நமக்குப் பிரியமானவர்களையும் கொள்ளைகொண்டுபோய்விடுவதாக அச்சுறுத்துகிறது; இந்நிலையில் இயேசுவின் உயிர்த்தெழுதல் எவ்வாறு ஒரு முக்கியமான சத்தியமாக இருக்கிறது?

## இயேசு உயர்த்தப்படுதல்

*“அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்.” அப் 2:33.*

பிரசங்கத்தின் மூன்றாம் பகுதியில், அந்நியபாஷைகுறித்து மீண்டும் பேதுரு குறிப்பிடுகிறார்; அங்கிருந்த பலர் அதுகுறித்து ஆச்சரியமடைந்திருந்தார்கள். காலை 9 மணியளவில் குடித்து வெறித்திருப்பார்களா என்று கேட்கிறார். அப் 2:15. மாறாக, பரிசுத்த ஆவியானவர் பரலோகத்திலிருந்து ஊற்றப்பட்டதாலேயே விசுவாசிகள் அந்நியபாஷையில் பேசினார்களெனக் கூறுகிறார்.

**தேவனுடைய வலதுபாரிசத்தில் இயேசு உயர்த்தப்பட்டதற்கும், பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்டதற்கும் உள்ள சம்பந்தம் என்ன? அப் 2:33–36.**

---

தேவனுடைய வலது பாரிசமானது அதிகாரமிக்க ஓரிடமாகும். சங் 110:1-3. பரலோகத்தில் இயேசு அந்த இடத்திற்கு உயர்த்தப்பட்டதால், தம் பிள்ளைகள்மேல் ஆவியானவரைப் பொழிந்தருளினார் என்று வேதவசனங்களைக் காட்டி பேதுரு பேசுகிறார். இயேசு உயர்த்தப்பட்டதால் இதற்குமுன் அவ்வளவு மேன்மையை அவர் பெற்றிருக்கவில்லை என்று அர்த்தமல்ல. யோவான் 1:1-3; 17:5. மாறாக, இயேசுவானவர் ஆண்டவரும் இரட்சகருமாக இருக்கிறாரென்று பிதா முற்றிலும் அங்கீகரித்ததை அது சுட்டிக்காட்டுகிறது. அப் 2:36.

வேதாகமத்தின் மிகமுக்கியமான ஒரு கருத்தை, அதாவது நன்மைக்கும் தீமைக்கும் இடையேயான அனைத்துலக போராட்டத்தை இது வலியுறுத்துகிறது. இயேசு உயர்த்தப்படாதிருந்தால், ஆவியானவர் பூரணமாக அருளப்பட முடியாது. யோவான் 7:39. இயேசு சிலுவையில் வெற்றிபெறாவிட்டால், அவர் மகிமையடைய முடியாது. யோவான் 17:4,5. வேறுவிதமாகச் சொன்னால், ஆவியானவர் அருளப்படுவதற்கு இயேசு உயர்த்தப்படுவது ஒரு நிபந்தனையாக இருந்தது. ஏனெனில், சிலுவையில் இயேசு சாதித்தவற்றையும், இவ்வுலகத்தின் ஆளுகையை நயவஞ்சகமாகப் பறித்தவனைத் தோற்கடித்ததையும் தேவன் அங்கீகரித்ததை ஆவியானவரின் வருகை எடுத்துக்காட்டியது. யோவான் 12:31.

பாவம் இவ்வுலகத்தில் நுழைந்ததால், தேவன்மேல் ஒரு சந்தேக நிழல் விழுந்தது. மனிதர்களை மீட்பதற்காக மட்டுமல்ல, சாத்தான் ஒரு பொய்யனென்று அடையாளங்காட்டி, தேவனை நியாயப்படுத்துவதற்கும் இயேசு சிலுவையில் மரிப்பது அவசியமாக இருந்தது. இயேசுவின் ஊழியக்காலத்தில், இரட்சிப்பின் யுகம் துவங்கியிருந்தது. லூக்கா 4:18-21. பிசாசுகளைத் துரத்தினார்; பாவங்களை மன்னித்தார்; அதன்மூலம் சாத்தானால் சிறைப்பட்டிருந்தவர்களை விடுதலையாக்கினார். அதற்கெல்லாம் சிலுவைதான் அவருக்கு முழு அதிகாரத்தையும் கொடுத்தது. கிறிஸ்து சுயநலமற்றவர் என்பது பரலோகத்தில் ஊர்ஜிதமானதுமே, சாத்தானுக்கு மரண அடி விழுந்தது; கிறிஸ்துவின் வருகைக்காக மக்களை ஆயத்தமாக்க ஆவியானவரை பொழிந்தருளும் பணி துவங்கியது.

**வியாழன், ஜூலை 12**

## முதல் பலன்கள்

பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டவர்கள் இருதயத்தில் குத்துண்டார்கள். ஒரு சில வாரங்களுக்கு முன் இயேசுவை சிலுவையில் அறையும்படி சொன்ன சிலரும்கூட அங்கிருந்திருக்கலாம். லூக்கா 23:13-25. நாசரேத்தின் இயேசுதான் தேவன் அனுப்பிவைத்த மேசியாவென இப்போது அறிந்ததுமே, துக்கமடைந் தவர்களாய், 'நாங்கள் என்ன செய்யவேண்டும்?' என்று கேட்டார்கள். அப் 2:37.

**பாவ மன்னிப்பைப் பெறுவதற்கான இரண்டு அடிப்படை நிபந்தனைகள் என்ன? அப் 2:38.**

---

மனந்திரும்புதல் என்றால், வெறுமனே கவலைப்படுவதோ தவறுக்காக வருந்துவதோ அல்ல; மாறாக, பாவத்திலிருந்து திரும்பி, புதியதொரு திசையில் வாழ்க்கையைத் திருப்புவதாகும். அப் 3:20; 26:20. விசுவாசமும் மெய்யான மனந்திரும்புதலும் தேவன் தரும் ஈவுகள்; மற்ற ஈவுகளைப்போல இந்த ஈவை யும் நாம் புறக்கணிக்க வாய்ப்புள்ளது. அப் 5:31-33; 26:19-21; ரோமர் 2:4. யோவான் ஸ்நானன் வந்ததுமே மனந்திரும்புதலையும் ஞானஸ்நானத்தையும் சம்பந்தப்படுத்திப் பேசினார். மாற்கு 1:4. அதாவது, மனந்திரும்புதலின் வெளிப் பாடே ஞானஸ்நானம்; பாவம் கழுவப்படுவதையும், பரிசுத்த ஆவியானவரின் உதவியால் ஒழுக்கமான வாழ்க்கை துவங்குவதையும் சுட்டிக்காட்டுகிற சடங்கு அது. அப் 2:38; 22:16; ஒப்பிடவும்: தீத்து 3:5-7.

**மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்குக் கொடுக்கப்படும் விசேஷித்த வாக்குறுதி என்ன? அப் 2:38,39.**

---

பெந்தெகொஸ்தே நாளில் கூடியிருந்தவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டதோடு, ஆவியானவரையும் பரிபூரணமாகப் பெற்றார்கள்; தனிப்பட்ட வளர்ச்சிக்கும், சபையில் சேவைசெய்வதற்கும், குறிப்பாக ஊழியப்பணி செய் வதற்கும் ஆவியானவரைப் பெறுவது அவசியமாக இருந்தது. நற்செய்தியின் நம்பிக்கையை பிறரோடு பகிர்ந்துகொள்வதற்கே சபை இருக்கிறது; எனவே, பரிசுத்த ஆவியானவரைப் பெறுவதுதான் எல்லாவற்றிலும் மிகச்சிறந்த ஆசீர் வாதமாக இருக்கவேண்டும். 1பேதுரு 2:9. எனவே, ஆவியானவரைப் பெற் றுக் கொண்டதுமே இரட்சிப்பின் நிச்சயமும் பரிசுத்த ஆவியின் வல்லமையும் அவர்களுக்குக் கிடைத்தது; சபை தன் ஊழியப்பணியைச் செய்வதற்கு அது தேவையான திறனைக் கொடுத்தது.

---

நற்செய்தியை அறிவிக்க விரும்புகிற எவராக இருந்தாலும் தாங்கள் 'பாவமன்னிப்பைப்' பெற்று விட்ட நிச்சயத்தோடு இருப்பது ஏன் மிகவும் முக்கியமானதாகும்? நீங்களே அந்த நிச்சயத் தைப் பெற்றிருக்காவிட்டால், மற்றவர்களுக்கு என்ன நம்பிக்கையின் வார்த்தைகளை நீங்கள் சொல்ல முடியும்?

## மேலும் படிக்க:

பரலோகத்தில் என்ன நிகழ்ந்தது, உலகத்தின் பாவங்களுக்காக கிறிஸ்து செய்த தியாகத்தை பிதாவானவர் எவ்வாறு ஏற்றுக்கொண்டார் என்பது குறித்த ஒரு முக்கிய சத்தியத்தை பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட நிகழ்வு சுட்டிக்காட்டியது. பூமியில் தாம் செய்த தியாகத்தின் அடிப்படையில் பரலோகத்தில் நமக்காக ஓர் ஊழியத்தை இயேசு செய்யத் துவங்கினார். நம் கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு, பூமியோடு பரலோகம் இணைக்கப்பட்டுள்ளது என்கிற உண்மையை வெளிப்படுத்திய அற்புத நிகழ்வுகள் இவை.

“வாக்களிக்கப்பட்ட ஆசீர்வாதத்தை கிறிஸ்துவின் பிள்ளைகள் பெறவிருந்ததற்கு, கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதே அடையாளமாக இருந்தது. பரலோக வாசல்களுக்குள் கிறிஸ்து காலடி வைத்ததுமே, தூதர்கள் பணிந்துகொண்டார்கள்; கிறிஸ்து சிங்காசனத்தில் அமர்ந்தார். இந்தக் கொண்டாட்டம் முடிந்ததுமே, பரிசுத்த ஆவியானவர் பரிபூரணமாக சீடர்கள்மேல் பொழிந்தருளப்பட்டார். நித்திய காலம் முழுவதும் பிதாவோடு தாம் பெற்றிருந்த மகிமையால் கிறிஸ்து மகிமைப்படுத்தப்பட்டார். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட நிகழ்வானது, மீட்பரின் ஊழியம் வெற்றிகரமாக நிறைவேறிற்றென்று பரலோகம் கொடுத்த அறிவிப்பாக இருந்தது. பரலோகத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் அவர் பெற்றுக்கொண்டதற்கும், தம் பிள்ளைகளுக்காக அபிஷேகிக்கப்பட்டதற்கும் அடையாளமாக, தாம் வாக்களித்தபடியே பரலோகத்திலிருந்து பரிசுத்த ஆவியானவரை தம் சீடர்கள்மேல் பொழிந்தருளினார்.” - *EGW, AA, p 38,39.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *பெந்தெகொஸ்தே போன்ற என்ன அனுபவத்தை சபை இன்று எதிர்பார்க்க முடியும்? எது மீண்டும் நிகழக்கூடியது? எது மீண்டும் நிகழ வாய்ப்பில்லாதது?*
2. *பெந்தெகொஸ்தே நாளில் இயேசுவின் உயிர்த்தெழுதலைத்தான் பேதுரு அதிகமாக வலியுறுத்திப் பேசினார். மேசியாபற்றி பல்வேறு எதிர்பார்ப்புகள் யூதர்களுக்கு இருந்தன; ஆனால், அந்த மேசியா மரித்தபிறகு, மீண்டும் உயிரோடு எழும்புவார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை; உயிர்த்தெழுதலின் விசேஷமே அதுதான். யாருமே தங்கள் ஆவிக்குரிய கண்களால் அதைக் காணவில்லை; மேசியாவின் வருகைக்காகக் காத்திருந்தவர்கள் அதை எதிர்பார்க்கவும் இல்லை. பிரபல போதகங்கள் எப்படி இருந்தாலும், வேதாகமம் என்ன போதிக்கிறதென்றுதான் நாம் பார்க்கவேண்டும்; இதுகுறித்த என்ன பாடத்தை இதிலிருந்து நாம் கற்றுக்கொள்கிறோம்?*
3. *ஞானஸ்நானம் எடுக்கவேண்டியதின் அவசியத்தை அப் 2:38 வலியுறுத்துகிறது. அப்படியானால், இயேசுவை விசுவாசித்த ஒருவர், தான் ஞானஸ்நானம் எடுப்பதற்குமுன்னரே மரித்துப்போனால், அவர் நரகத்திற்குத்தான் செல்லுவார் என்று அர்த்தமா? உங்கள் பதிலுக்குச் சரியான காரணத்தைச் சொல்லுங்கள்.*